


பஸ்ஸில் பயணம் செய்யும்போது பயணியிடம் கண்டக்டர் எங்கே போகவேண்டும்? என்று கேட்கும்போது 'தெரியாது' என்று பயணி பதில் சொன்னால் எவ்வளவு வேடிக்கையாய் இருக்கும்? ஆனாலும் இதுபோன்ற வேடிக்கை நடந்து கொண்டுதான் இருக்கிறது! கோடிக்கணக்கானோர் எங்கே போகிறோம் என்று தெரியாமலேயே போய்க்கொண்டிருக்கிறார்கள். இதை வாசிக்கும் உங்களுக்கு நீங்கள் எங்கே போகிறீர்கள் என்று தெரியுமா?

வாழ்க்கையே ஒரு பயணம்தான். பிறந்தபோது இந்த பயணத்தை ஆரம்பித்தோம். சாகும்போது இது முடியும். மண்ணுக்குள் போய் முடியப் போகிறோம் என்று எண்ணுகிறீர்களா? இல்லவே இல்லை. காற்றுப்போனால் எல்லாம் போச்சு என்கிறீர்களா? உயிர் என்பது வெறும் காற்றுதான் என்றால் செத்தவுடன் சைக்கிள் பம்ப் வைத்து காற்று அடித்தால்

உயிர் வருமா? வராது. உயிர் என்பது காற்று அல்ல. உயிர் என்பதுதான் நீங்கள். அதுதான் ஆத்துமா. மரிக்கும்போது உங்கள் உடம்பை விட்டு நீங்கள் வெளியே வருவீர்கள். உடல் மண்ணுக்குள் போகும். ஆனால் ஆவியாக இருக்கும் நீங்கள் இரண்டில் ஒரு இடத்திற்குப் போவீர்கள். இந்த உலகத்தில் இருக்கும்போது கடவுளுக்குப் பயந்து பாவ மன்னிப்பு பெற்று பரிசுத்தமாய் வாழ்ந்தால் கடவுள் வாழும் மோட்சம் என்றும் இடத்தில் போய் நீடூழி வாழ்வீர்கள். பாவத்தோடு வாழ்ந்து மரித்தால் நரகம் என்னும் வேதனையுள்ள இடத்திதற்குப் போய் பிசாசுகளுடன் நித்திய நித்தியமாய் துன்பம் அனுபவிப்பீர்கள்.

இந்த உலகத்தில் எவ்வளவு சொத்து, சுகம் இருக்கிறது என்பதல்ல முக்கியம். உங்கள் முடிவு எப்படி இருக்கும் என்பதைத்தான் யோசித்துப்பார்க்க வேண்டும். உதாரணமாக ரயில் பயணம் செய்கின்ற சிலர் படுக்கை வசதியுடன் பயணம் செய்கின்றனர். சிலர் இருக்கை வசதிக்கு பதிவுசெய்து பயணம் செய்கின்றனர். ஆனால் போய்ச் சேரவேண்டிய ஊர் வந்தவுடன் எல்லோரும் இறங்கிதானே ஆகவேண்டும்?

நீங்கள் இன்னும் எவ்வளவு காலம் வாழப்போகிறீர்கள்? மனிதனின் ஆயுட்காலம் 70, 80 அல்லது மிஞ்சிப் போனால் 100 வருடம்தானே. இந்த அற்பகால பயணத்தில் இருக்கின்ற நீங்கள் மரணமாகிய ஸ்டேஷன் வரும்போது எங்கே போவீர்கள் என்று தெரியாமல் வாழ்ந்தால் எப்படி?

உலகில் பிறந்த யாவரும் பாவிகளே. எந்த மதத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் நாம் எல்லோரும் பாவிகளே. கடவுள் மனிதனை நல்லவனாகவே படைத்தார். மனிதன் கடவுளுடைய

கட்டளையை விட்டு விலகி பாவியானான். நீங்கள் பாவத்துடன் மரித்தால் நித்தியமான நரகத்திற்குப் போய் வேதனைப்படுவீர்கள். உங்கள் பாவத்தை உங்களை விட்டு நீக்கக்கூடிய சக்தி எந்த மனிதனுக்கும் இல்லை. நீங்கள் எவ்வளவுதான் தருமம் பண்ணினாலும், புண்ணிய ஸ்தலங்களுக்குப் போனாலும், புனித நீராடினாலும் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படாது.

மனிதனின் பாவத்தை போக்கவே கடவுள் மனிதனாய் உலகிற்கு வந்தார். அவர் பெயர் இயேசு. இயேசு என்ற பெயரின் பொருளே பாவத்தை மன்னிக்கிறவர். பாவமற்ற அவர் மனுக்குலத்தின் பாவத்தை தன்மேல் சுமந்து மனிதனின் பாவத்திற்காக தமது இரத்தத்தை சிந்தி மரித்து மூன்றாம் நாள் உயிரோடு எழும்பினார். இன்றும் அவர் உயிருடன் இருக்கிறார். அவர் ஒருவரே உங்கள் பாவத்தை மன்னிக்க சக்தி வாய்ந்தவர். அவர் உங்கள் பாவங்களை மன்னித்து, உங்களை தம்முடைய பிள்ளைகளாக மாற்றிவிடுவார். பாவமன்னிப்பிற்காக நீங்கள் பணம் செலவு செய்ய வேண்டாம். இயேசு இதை இலவசமாக நமக்குத் தருகிறார்.

**நீங்கள் செய்ய வேண்டிய காரியம் மிக எளிதானது :**

நீங்கள் ஒரு பாவி என்பதை ஒத்துக் கொள்ளுங்கள். உங்கள் நல்ல செயல்களால் உங்கள் பாவங்கள் உங்களை விட்டு நீங்காது என்பதை உணருங்கள். இயேசு ஒருவரே உங்கள் பாவத்திற்காக இரத்தம் சிந்தி மரித்தார். உயிருடன் எழுந்தார் என்று நம்புங்கள்.

இயேசுவை நோக்கிக் கீழ்க்கண்ட பிரார்த்தனையை உண்மையாக செய்யுங்கள். இயேசு உங்கள் பாவங்களை மன்னிப்பார். நீங்கள் தேடும் நிம்மதியைத் தருவார். உங்களை ஆசீர்வதிப்பார்.

**ஜெபம் :**

**''இயேசுவே, உங்களை என் கடவுளாக ஏற்றுக்கொள்கிறேன். நான் பாவி. என் பாவத்தை மன்னியுங்கள். இன்று முதல் என்னை உங்கள் பிள்ளையாக ஏற்றுக் கொள்ளுங்கள். மன நிம்மதி தாருங்கள். இனி பாவம் செய்யாதபடி நல்லவனாய் வாழ உதவி செய்யுங்கள். நன்றி. ஆமென்''**

நீங்கள் இன்னும் அதிகமான சத்தியங்களை அறிய விரும்பினால் கீழ்க்காணும் முகவரிக்குத் தொடர்புக்கொள்ளுங்கள்.


**சபை முகவரி**

**சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச்**

**ஜென்னி பிளாசா**

5, பாரதியார் சாலை, கண்டோன்மென்ட், திருச்சி – 1

(தலைமை தபால் நிலையம் அருகில்)


**ஞாயிறு இன்னிசை துதி ஆராதனைகள்**

***தமிழ் ஆராதனைகள் – காலை 7.00 மணி, 11.00 மணி***

***ஆங்கில (English) ஆராதனை - காலை 9.00 மணி***

***மாலை ஆராதனை – மாலை 6.30 மணி***

*அன்புடன் அழைக்கின்றோம்*


**தொடர்புக்கு:**

**87789 78154, 87789 08759**